# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: திரு.ப.இரமேஷ் பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி திருவையாறு

2026–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30–ஆம் நாள் செவ்வாய்கிழமை

அசல் வழக்கு எண்.103/2025
CNR No.TNTJ15-000092-2025

முகம்மது ஆரிப் வாதி

/எதிராக/

1.சப்ரின் சாதியா பேகம்
2.சார்பதிவாளர், அய்யம்பேட்டை
3.மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் பிரதிவாதிகள்

வழக்கறிஞர்கள் முன்னிலை

| | | |
|---|---|---|
| வாதிக்காக | : | திருமதி.M.ரங்கீலா |
| பிரதிவாதிகள் | : | தோன்றா தரப்பினர் |

## தீர்ப்புரை

வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே கடந்த 06.07.2017 அன்று அய்யம்பேட்டை, அஞ்சமன் பாத்திமா ஃபத்ர் பள்ளிவாசலில் நடந்த திருமணத்தை "குலா" முறையிலான விவாகரத்தை விளம்புகை செய்யக் கோரியும், 2ம் பிரதிவாதியான அய்யம்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் திருமண வரிசை எண்.100/2017 நாள் 11.08.2017 திருமண பதிவினை நீக்கரவு செய்ய 2ம் பிரதிவாதி சார்பதிவாளருக்கு செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்கக் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.30 16:49:34 +0530

1) **வழக்குரை சுருக்கம்:**

1.1) வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய இருவரும் முறையே கணவன் மனைவி ஆவார்கள். வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் சென்ற 06.07.2017–ம் தேதி அய்யம்பேட்டை கிராமத்தில் உள்ள அஞ்சமன் பாத்திமா ஃபத்ர் பள்ளிவாசலில் திருமணம் நடைபெற்று 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் (Marriage Sl.No.Ayyampettal/100/2017) நாள் 11.08.2017 பதிவு செய்துள்ளனர். திருமணத்திற்கு பின்னர் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி இருவரும் சேர்ந்து கணவன் மனைவியாக வாதியின் பெற்றோர் வீட்டில் 3 ஆண்டு காலம் குடும்பம் நடத்தியுள்ளனர். எனினும் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய இருவருக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அவர்களுக்குள் சுமூகமான உறவு இல்லாமல் இருந்து வந்ததால் அவர்களுக்கு குழந்தை இல்லை.

1.2) வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய இருவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினை கலைத்து சுமூகமான உறவு ஏற்படுத்த குடும்பத்தில் அக்கறையுள்ள பெரியவர்கள் முன்னிலையில் பலமுறை பேச்சுவார்த்தை பேசப்பட்டும் எவ்வித பலனும் ஏற்படவில்லை. அதனால் வாதியை கைவிட்டு 1–ஆம் பிரதிவாதி கடந்த 2022 வருடம் முதல் இன்றுவரை அவரது பெற்றோர்களுடன் வசித்து வருகிறார். இச்சூழ்நிலையில் 1ம் பிரதிவாதியும், வாதியும் இனி சேர்ந்து கணவன் மனைவியாக குடும்பம் நடத்த வாய்ப்பு இல்லை என்பதால் முஸ்லிம் ஷரியத் சட்டம் "குலா" முறையில் மணமுறிவு (விவாகரத்து) விடுதலை பத்திரம் எழுதப்பட்டது.



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.30 16:49:54 +0530

1.3) மேலும் இந்த "குலா" என்கிற மணவிலக்கு பத்திரம் ஏற்பட்ட பிறகு 1–ஆம் பிரதிவாதிக்கு அவரின் பெற்றோர்களால் கொடுக்கப்பட்ட அனைத்து மஹர் தொகை மற்றும் நகைகள் அனைத்தும் 1ம் பிரதிவாதிக்கே திருப்பிக்கொடுக்கப்பட்டுவிட்டது. வாதி மற்றும் 1–ஆம் பிரதிவாதி ஆகிய இருவரும் தங்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினை கலைந்து கணவன் மனைவியாக சேர்ந்து குடும்பம் நடத்த எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதால் வாதி தனது முஸ்லிம் ஷரியத் சட்டம் "குலா" முறையில் விவாகரத்து கேட்டு 1ம் பிரதிவாதியும் ஒப்புக் கொண்டு அதன்படி "குலா" முறையில் தஞ்சை மாவட்ட அரசு தலைமை டவுன் காஜி தலைமையில் வாதி மற்றும் 1 ம் பிரதிவாதி ஆகிய இருவருக்கும் இடையில் நடைப்பெற்ற "நிக்காஹ்" செல்லதக்கதல்ல என "குலா" (மணமுறிவு) சான்றிதழ் வழங்கியுள்ளார்.

1.4) இதை தொடர்ந்து கடந்த 12.04.2025 அன்று வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய இருவருக்கும் இடையில் இருவீட்டார் முன்னிலையில் தலாக் ஈர்மா என்னும் விவாகரத்து ஊர்ஜிதப் பத்திரம் தயார் செய்து தலாக் முறையில் சாட்சிகள் 1)திரு.முஸ்தபா (வாதியின் அண்ணன்), 2)திருமதி.ஹகிதா பானு (1ம் பிரதிவாதியின் தாயார்) ஆகியோர் முன்னிலையில் தலாக் முறையில் விவாகரத்து ஊர்ஜிதப் பத்திரம் தயார் செய்யப்பட்டது. வாதி கூறியுள்ள "குலா" முறையிலான விவாகரத்து ஏற்பட்டுள்ளதால் தற்போது நடைமுறையில் உள்ள சட்டப்படியும், மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் நீதிமன்றம் மூலம் மட்டுமே "குலா" முறையிலான விவாகரத்து பெற முடியும் என்பதால்



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.30 16:50:01 +0530

மேற்கண்ட பரிகாரங்களுக்காக வாதி இவ்வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

1.5) வாதி கோரும் "குலா" முறையிலான விவாகரத்து விளம்புகை அய்யம்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள திருமண பதிவினை நீக்கறவு செய்ய செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கிடைக்கவில்லை எனில் வாதிக்கு ஈடு செய்ய இயலாத கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும். வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே கடந்த 06.07.2017ம் தேதி அன்று அய்யம்பேட்டை கிராமத்தில் உள்ள அஞ்சமன் பாத்திமா ஃபத்ர் பன்னிவாசலில் இரு ஜமாத்தார்கள், பள்ளிவாசல் இருவீட்டார்கள் முன்னிலையில் நடந்த திருமணத்தை "குலா" முறையிலான விவாகரத்தை விளம்புகை செய்திடவும், 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் திருமண வரிசை எண்.100/2017 நாள் 11.08.2017 ஆவணப் பதிவை நீக்கறவு செய்ய செயறுலுத்துக் கட்டளை வழங்கக் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு முதலாம் பிரதிவாதி ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக அறிவிக்கப்பட்டும், 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆஜராகி இருந்து போதிய வாய்ப்பளித்தும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்படாததால் 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு தலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.30 16:50:08 +0530

3) **சாட்சியங்கள்:**

வாதி தனது வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது வா.சா.1 முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டு வாதித்தரப்பு சாட்சியங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

5) இவ்வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் வாதி கோரியுள்ள விளம்புகை மற்றும் செயலுறுத்தக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

6) **தீர்வு:**

6.1) வா.சா.ஆ.2 மூலம் வாதிக்கும் 1–ஆம் பிரதிவாதிக்கும் இடையே கடந்த 06.07.2017 அன்று திருமணம் நடைபெற்றுள்ளது என்று நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திருமணம் கடந்த 19.07.2022 அன்று முறிந்தது என்று 20.04.2023 நாளிட்ட "குலா" சான்றிதழ் (வா.சா.ஆ.3) மூலமாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி "குலா" (மணமுறிவு) நடந்ததை ஊர்ஜிதம் செய்ய வா.சா.ஆ.4 ஏற்படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. மேற்படி ஆவணங்களை மறுத்துரைக்க பிரதிவாதி முன்வரவில்லை. இந்த வழக்கிற்கான அழைப்பாணையை பெற்றுக்கொண்ட 1–ஆம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி வாதியின் வழக்கினை எதிர்த்து வழக்கு நடத்தவில்லை. வாதியின் வழக்கில் மறுக்க கூடிய சங்கதிகள் எதுவுமில்லை என்பதால்தான் 1–ஆம் பிரதிவாதி



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.30 16:50:16 +0530

நீதிமன்றத்தில் ஆஜராகி வாதியின் வழக்கினை எதிர்க்கவில்லை என்று அனுமானம் கொள்ளப்படுகிறது.

6.2) வாதிக்கும் 1–ஆம் பிரதிவாதிக்கும் இடையே நடைபெற்ற திருமணம் "குலா" மூலம் முறிந்திருந்தாலும் அது 2–ஆம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு இரத்து செய்யப்படாமல் நிலுவையில் இருந்து வருகிறது. வாதிக்கும் 1–ஆம் பிரதிவாதிக்கும் இடையே கணவன் மனைவி என்ற உறவு முறிந்த பிறகு திருமண பதிவு மட்டும் நிலுவையில் இருந்து எந்த பிரயோஜனமும் இல்லை. எனவே அந்த கசந்த திருமண பதிவை இரத்து செய்ய கோரி வாதி நீதிமன்றத்தை நாடி வந்துள்ளதை அறிய முடிகிறது. இறந்து போன திருமண உறவினை காகிதத்தில் மட்டுமே நீடித்து வருவது பயனற்றது.

6.3) மேற்கண்ட சூழலில் வாதி கோரியுள்ள விளம்புகை மற்றும் செயலுறுத்தக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றும் வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் தீர்வு காண்கிறேன்.

7) **இறுதியாக வாதிக்கும் 1–ஆம் பிரதிவாதிக்கும் இடையே கடந்த 06.07.2017 அன்று நடந்த திருமணம் "குலா நாமா" மூலமாக இரத்து செய்யப்பட்டது என்று விளம்புகை செய்தும், அய்யம்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள திருமண பதிவு வரிசை எண்.100/2017–ஐ நீக்கறவு செய்ய 2–ஆம் பிரதிவாதிக்கு செயறுலுத்துக் கட்டளை பிறப்பித்தும், வாதியின் வழக்கினை செலவுத்தொகையின்றி அனுமதித்து தீர்ப்பளிக்கிறேன்.**



PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.30 16:50:35 +0530

இத்தீர்ப்புரை என்னால் வாய்மொழியாக சொல்லப்பட்டு கூகுள் டாக்ஸ் உதவியுடன் வரிவடிவம் கொடுக்கப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (30.06.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.30 16:50:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி திருவையாறு.

1. வாதித்தரப்பு சாட்சி:

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.1 | திரு.முகமது ஆரிப் |

2. வாதி தரப்பு சான்றாணங்கள்:

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | வாதியின் புகைப்படம். |
| 2 | வா.சா.ஆ.2 | வாதி மற்றும் பிரதிவாதியின் திருமண பதவு சான்றிதழ் நாள் 11.08.2017 உண்மை நகல். |
| 3 | வா.சா.ஆ.3 | 20.04.2023 நாளிட்ட குலா சான்றிதழ் உண்மை நகல். |
| 4 | வா.சா.ஆ.4 | 12.04.2025 நாளிட்ட தலாக்நாமா என்னும் விவாகரத்து ஊர்ஜித பத்திரம் அசல். |
| 5 | வா.சா.ஆ.5 | வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.30 16:50:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு.